DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C No. 20 /2023 |
| Deposition of witness | : | PW-7 |
| Name | : | ரவி |
| Father's /Husband Name | : | இரத்தினம் |
| Village | : | மயிலாடுதுறை |
| Taluk | : | மயிலாடுதுறை |
| Age | : | 59 |
| Occupation | : | காவல் உதவி ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 03rd day July 2025.
Accused present.

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்:–**

நான் புகார்தாரரிடம் எந்த தேதியில் வாக்குமூலம் வாங்கினேன் என்றால் 07.07.2022 ம் தேதி வாங்கினேன். மனு ரசீது எண் என்னவென்றால் 299/2022 ஆகும், மனு ரசீதை வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மனு பதிவு செய்து 9 நாட்கள் பிறகு தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரிதான். எந்த புகாருக்கு மனு ரசீது கொடுக்கவேண்டும் எதற்கு முதல் தகவலறிக்கை பதிவு செய்ய வேண்டுமென்று எனக்கு தெரியும் என்றால் சரிதான். பிடிக்கக்கூடிய குற்றமாக இருந்தால் உடனடியாக முதல் தகவல்அறிக்கை பதிவு செய்யவேண்டும், பிடிக்கக்கூடாத குற்றமென்றால் மனு ரசீது போடவேண்டும் என்றால் சரிதான். இவ்வழக்கின் குற்றங்கள் பிடிக்கக்கூடிய குற்றங்கள் என்றால் சரிதான். முதல் தகவல்அறிக்கை பதிவு செய்ததற்கான காலதாமத்திற்கான காரணம் என்னவென்றால் மனு ரசீது பதிவு செய்ததால் காலதாமதம் ஏற்பட்டது. புகார்தார் 07.07.2022 ம்தேதி கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் தான் முதல் தகவல்அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரிதான். இவ்வழக்கில் முதல் தகவல்அறிக்கை பதிவு செய்து குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தது நான் தான் என்றால் சரிதான். அவ்வாறு செய்தது இயற்கை நீதி கோட்பாட்டுக்கு முரணானது என்றால் சரியல்ல. புகார்தாரர் படியில் பயணம் செய்ததால் தான் காயம் ஏற்பட்டதே தவிர எதிரியால் காயம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. புகார்தாரருக்கும் எதிரியின் தகப்பனாருக்கும் பணப்பிரச்சனை இருந்ததென்றால் சரிதான். நான் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. நான் அன்றைய தேதியில் பணியிலிருந்ததற்கான நாட்குறிப்பை வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா

என்றால் இல்லை.  முதல் தகவல்அறிக்கையில் காலம் எண். 14 ல் புகார்தாரரின் கையொப்பம் பெற்றேனா என்றால் அவர் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்ததால் பெறவில்லை.  பொது இடத்தில் எதிரி புகார்தாரரை எந்தவித தகாத வார்த்தையாலும் பேசவில்லை என்றால் சரியல்ல.  எதிரிக்கும் வழக்கிற்கும், புகார்தாரரின் காயத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.  எதிரி புகார்தாரரை எந்தவிதத்திலும் கொலை மிரட்டல் விடுக்கவில்லை என்றால் சரியல்ல.  சம்பவ இடமருகே வேகத்தடை இருந்ததென்றால் சரிதான்.  புகாரை சரிவர விசாரிக்காமல் முதல் தகவலறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை.

M S BHARATHIDHASAN

Digitally signed by M S BHARATHIDHASAN
DN: cn=M S BHARATHIDHASAN, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2025.07.03 12:29:20 +0530